# சிதம்பரம் நகராட்சி

*2015-16ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2016-17ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீட்டின் விளக்க உரை.*

## I வருவாய் நிதி

### வரவு விவரம்

*வருவாய் நிதிக்கான பெரும்பான்மையான வரவு மாநில நிதி குழு மான்யம் மற்றும் சொத்துவரியில் பொது காரியங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் முத்திரை தீர்வை வரி, திரையரங்குகளில் வசூலிக்கப்படும் பொழுதுபோக்கு வரி, அனுமதி கட்டணங்கள் போன்றவற்றிலிருந்து வசூல் செய்யப்படும் தொகைகளிலிருந்து இந்த வருவாய் கிடைக்கிறது.*

### தலைப்பு வாரியான விவரம்

**1001 சொத்துவரி**

*சொத்துவரியில் பொது மற்றும் பொது சுகாதார வரி ஆகிய உபயோகங்களுக்கான பங்கீட்ட தொகைகள் இத்தலைப்பில் வரவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*சென்ற ஆண்டு இத்தலைப்பின் கீழ் ரூ.14442 ஆயிரம் வரவு வந்துள்ளது. இதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டில் ரூ.15000 ஆயிரமும் மதிப்பீடு ஆண்டில் ரூ.17500 ஆயிரமும் வரவு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**1006 தொழில் வரி**

*இத்தலைப்பின் கீழ் சென்ற ஆண்டு ரூ.3966 ஆயிரம் வரவு வந்துள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டில் ரூ.3523 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் ரூ.3576 ஆயிரமும் வரவு வரும் என கணக்கிடப்பட்டுள்ளது. இத்தலைப்பில் அச்ச மற்றும் அருவருக்கத்தக்க இனங்களில் வசூல் செய்யப்படும் இனங்களுக்கு புதிய தொழில்வரி விதிப்பு ஏற்படுத்துவதை கருத்தில் கொண்டு வருவாய் கணக்கிடப்பட்டுள்ளது.*

**1017 அச்ச மற்றும் அருவருக்கத்தக்க இனங்கள் வரவு**

*இத்தலைப்பின் கீழ் நகரத்தில் உள்ள அனைத்து வியாபார நிறுவனங்களும் விடுபடாமல் கேட்பு நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட வேண்டும். என்பதை கருத்தில் கொண்டு திருத்திய மதிப்பீட்டில் 149 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 151 ஆயிரமும் வரவு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

**1018 உணவு கலப்பட தடுப்பு உரிம வசூல்**

*உணவு மாதிரிகள் எடுக்கும் உணவு ஆய்வர்கள் பணியிடத்துடன் அரசினால் தனியே துறை ஏற்படுத்தப்பட்டால் இத்தலைப்பின் கீழ் வருவாய் ஏதும் கணக்கிடப்படவில்லை.*

**1019 கட்டிட உரிமம் கட்டணங்கள்**

*இத்தலைப்பின் கீழ் கடந்த ஆண்டு 310 ஆயிரம் வரவு வந்துள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டில் 129 ஆயிரம் வரவாக மதிப்பிடப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 131 ஆயிரம் வரவாக மதிப்பிடப்பட்டுளளது.*

**1022 தினசரி மார்கட் வசூல்**

*2015-16ம் ஆண்டு ஏலம் விடப்பட்டதை அனுசரித்து திருத்திய மதிப்பீட்டு ஆண்டில் 2334 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் 2369 ஆயிரமும் வரவு எதிர்ப்பார்க்கப்படுகிறது.*

**1025 விளம்பரம் மூலம் வரவு**

*குத்தகை மூலம் ஏலம் விடப்பட்டதில் திருத்திய மதிப்பீட்டில் 117 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் 119 ஆயிரமும் வரவு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

**1026 பேருந்து நிலைய கடைகள் வசூல்**

*இத்தலைப்பின் கீழ் 2015-16ம் ஆண்டில் நிர்ணயம் செயய்பப்ட்ட கேட்பு 2465 ஆயிரம் திருத்திய மதிப்பீட்டிலும் மதிப்பீட்டு ஆண்டில் 2502 ஆயிரம் வரவு எதிர்பார்த்து கணக்கிடப்பட்டுள்ளது.*

**1029 சர்வே கட்டணம்**

*இத்தலைபின் கீழ் 2015-16ம் முடிய 37 ஆயிரம் வரவு வரப்பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் மதிப்பீட்டாண்டில் 38 ஆயிரமும் திருத்திய மதிப்பீட்டால் 60 ஆயிரமும் வரவாக கணக்கிடப்பட்டுள்ளது.*

**1031 மேம்பாட்டுக் கட்டணம்**

*தற்போது தொகைகள் வசூல் செய்யப்பட்டு வருவதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டில் 104 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 106 ஆயிரமும் வரவு வரும் என எதிர்பார்த்து கணக்கிடப்பட்டுள்ளது.*

**1036, 1037, 1038, 1039 கட்டிடங்கள் வாடகை, சமுதாய கூடம் வாடகை ஆணையர் குடியிருப்பு வாடகை, கட்டணக் கழிப்பிடங்கள் வசூல்.**

*இத்தலைப்புகளில் தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கேட்பின் அடிப்படையில் கட்டிடங்கள் வாடகையாக திருத்திய மதிப்பீட்டில் 42275 ஆயிரமும், மதிப்பீட்டாண்டில் 42335 ஆயிரமும் வரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

**1045 இதர வரவுகள்**

*இத்தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் 969 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 984 ஆயிரமும் வரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

**1046 முத்திரை தீர்வை வரி வரவு**

*கடந்த ஆண்டில் இத்தலைப்பின் கீழ் 4500 வரவு வரப்பெற்றுள்ளது. இத்ன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டில் 4500 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 4510 ஆயிரமும் வரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

**1052 திட்டங்கள் செயல்படுத்திட மானியம் வரவு**

*இந்நகராட்சியில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் திட்டம் மான்யம் மற்றும் கொசு ஒழிப்பு திட்டம் மான்யம் ஆகியவை துரிதப்படுத்தி அரசிடமிருந்து வசூல் செய்திட திட்டமிட்டு திருத்திய மதிப்பிட்டில் 3658 ஆயிரமும், மதிப்பீட்டாண்டில் 3713 ஆயிரமும் வரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

**1053 மாநில நிதிக்குழு மான்யம்**

*சென்ற ஆண்டு இத்தலைப்பின் கீழ் 41640 ஆயிரம் வரவு வரப்பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு அரசினால் எடுக்கப்படும் மான்யம் திருத்திய மதிப்பீட்டில் 9067 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 9203 ஆயிரமும் வரப்பெறும் என எதிர்பார்த்து வரவு எடுக்கப்பட்டுள்ளது.*

**1054 நகல் எடுப்பதற்கான கட்டணம்**

*சென்ற ஆண்டு இத்தலைப்பின் கீழ் 180 ஆயிரம் வரவு வரப்பெற்றுள்ளது. திருத்திய மதிப்பீட்டாக 180 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 185. ஆயிரம் வரவு எதிர்பார்க்கப்படுகிறது.*

**1067 முதலீடுகள் மூலம் வட்டி வரவு**

*இந்நகராட்சியில் வரப்படும் திட்டங்களின் மான்ய வரவுகள் பயன்படுத்தப்படும் வரை குறுகிய கால முதலீடுகளாக வைப்பு நிதியில் வைப்பதன் மூலம் இந்நகராட்சிக்கு வட்டி வரவாக திருத்திய மதிப்பீட்டின் 214 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 217 ஆயிரம் வரவு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

**1068 வங்கிகளிலிருந்து வட்டி வரவு**

*இத்தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் 981 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 996 ஆயிரமும் வரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

# செலவு விவரம்

**வருவாய் நிதிக்கான பெரும்பான்மையான செலவினமாக பணியாளர் ஊதியம், நகராட்சியை இயக்குவதற்கான தினசரி செலவினங்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஓய்வூதிய செலவினங்கள் உள்ளது. தலைப்புகள் வாரியான விவரம்**

***2001 2010 ஊதியம்***

*இந்நகராட்சியில் கடந்த ஆண்டில் 36500 ஆயிரம் ஊதியத்திற்கு செலவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலும் புதிய பணியிடங்கள் நிரப்பிட திட்டமிடப்பட்டிருப்பதால் திருத்திய மதிப்பீட்டில் 38418 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 38994 ஆயிரமும் செலவிடப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.*

***2011 பொங்கல் மிகை ஊதியம்***

*கடந்த ஜனவரி மாதம் இந்நகராட்சி பணியாளர்களுக்கு பொங்கல் மிகை ஊதியம் தொகை ரூ.379 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதனை திருத்திய மதிப்பீட்டில் 385 ஆயிரமும்* திட்ட மதிப்பீட்டில் 500 ஆயிரமும் *செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***2014 சீருடை செலவுகள்***

*பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்குவதன் மூலம் ஏற்படும் செலவு திருத்திய மதிப்பீட்டில் 167 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 170 ஆயிரம் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***2015 தொலைபேசி கட்டணம்***

*இந்நகராட்சியின் தொலைபேசி கட்டணம் குறைக்கும் நோக்கத்தில் திருத்திய மதிப்பீட்டில் 121 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் 129 ஆயிரமும் செலவு கணக்கிடப்பட்டுள்ளது.*

***2016 இலகுரக வாகனங்கள் பராமரிப்பு செலவு***

*இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் இலகுரக வாகனங்கள் பராமரிப்பிற்காக திருத்திய மதிப்பீட்டில் 1758 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 1784 ஆயிரம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

***2018 எழுது பொருட்கள் மற்றும் அச்சுக்கட்டணம்***

*இத்தலைப்பின் கீழ் 2014-15ம் ஆண்டில் இதுவரை 678 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டில் 700 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் இச்சலெவினத்தில் குறைக்கும் நோக்கத்தில் 700 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்ப்ட்டுள்ளது.*

***2019 விளம்பர செலவுகள்***

*விளம்பர செலவுக்கான திருத்திய மதிப்பீட்டின் 566 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 574 ஆயிரமும் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**2026 கணிப்பொறி செலவினம்**

இத்தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் 227 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 230 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2034 சிறப்பு சேமநலநிதி அரசு பங்குத்தொகை**

பணியாளர் ஓய்வு பெறுவதினால் அரசு பங்குதொகையாக 30 ஆயிரம் செலவிடப்பட்டது. திருத்திய மதிப்பீட்டாக 50 ஆயிரமும் 51 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் செலவிடப்படும் என நிர்ணயிக்கப்படுகிறது.

**2036 தணிக்கை கட்டணம்**

இந்நகராட்சி தணிக்கை கட்டணமாக 260 ஆயிரம் செலவிடப்பட்டது. திருத்திய மதிப்பீட்டில் 90 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 100 ஆயிரமும் தணிக்கை கட்டணமாக செலுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**2038 சொத்துகளுக்கான கழிவு**

இத்தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் 48217 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் 48940 ஆயிரமும் தொகை செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2040 திட்டங்களுக்கான நகராட்சி பங்குத்தொகை**

நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து திட்டங்களுக்கான தொகை வழங்குவதில் 2014-15ம் ஆண்டிற்கு 11697 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் 20570ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2046, 2047 செய்தி தாள்கள் கட்டணம் மற்றும் முத்திரை வில்லைகள் கட்டணம்**

இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் நூலகங்களில் பெறப்படும் செய்திதாள்கள் மற்றும் தபால்கள் அனுப்புவதற்கான முத்திரை வில்லைகள் வாங்கிட திருத்திய மதிப்பீட்டாண்டில் 866 ஆயிரமும் திட்ட மதிப்பீட்டில் 879 ஆயிரமும் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2048 அலுவலக கட்டிட மின் கட்டணம்**

இத்தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் 1000 ஆயிரமும் மதிப்பீடாண்டில் 1015 ஆயிரம் செலவினங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.

**2054 பங்கு தொகை**

கோயம்புத்தூர் பயிற்சி நிலையத்திற்கும், சிட்டி மேனேஜர்ஸ் அசோசியேசனுக்கும் திருத்திய மதிப்பீட்டில் 300 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 320 ஆயிரமும் செலுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2055 பணியாளர் நல செலவினம்**

பணியாளர் சேமநல நிதி வட்டி கணக்கிட்டு வழங்கிட திருத்திய மதிப்பீட்டில் 2055 ஆயிரமும் மதிப்பிட்டாண்டில் 2055 ஆயிரம் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2061 அமர்வுப்படி**

இத்தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் 220 ஆயிரமும் மதிப்பீட்டாண்டில் 223 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2070 கனரக வாகன பராமரிப்பு**

திருத்திய மதிப்பீட்டில் 1185 ஆயிரமும் மதிப்பீட்டாண்டிலும் 1203 ஆயிரம் செலவினமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**2088 தெருவிளக்குகள் மின் கட்டணம்**

தெருவிளக்குகளுக்கான மின் கட்டணம் திருத்திய மதிப்பிட்டில் 7000 மதிப்பீட்டு ஆண்டில் 7010 ஆயிரமும் நிதி செலவு ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**2089 தெரு விளக்குகள் பராமரிப்பு செலவினம்**

தெரு விளக்குகள் பராமரிக்க திருத்திய மதிப்பீட்டில் 4438 ஆயிரமும் மதிப்பிட்டு ஆண்டில் 4505 ஆயிரமும் செலவு ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**2100 துப்புரவு செலவினங்கள்**

துப்புரவு செலவினங்களை திருத்திய மதிப்பீட்டு ஆண்டிலும் மதிப்பீட்டு ஆண்டின் முறையே 8200 ஆயிரம் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மூலதன நிதி

2014-15ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்டங்களின் கீழ் நிதி வரப்பெற்றுள்ளது மற்றும் எஞ்சிய தொகைகள் எதிர்பார்க்கப்படுகிறது. அவைகள் முறையே மேலும் இத்திட்டங்களின் மூலம் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு செலவுகள் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

2015-2016 திருத்திய மதிப்பீடு

(தொகை ரூ. ஆயிரத்தில்)

| வரவுகள் | | தலைப்பு | செலவுகள் | |
|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | தொகை | | செலதாக்கம் | தொகை |
| பிற்பட்டோர் நலநிதி | 0 | **3102** | க்ட்டிடங்கள் | 0 |
| ஒருஙகிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் | 0 | **3105** | வடிகால்கள் | 0 |
| இடைநிரப்பு மான்யம் | 0 | **3106** | | 0 |
| சட்டமன்ற தொகுதிமேம்பாட்டுநிதி | 0 | **3108** | இலகுரக வாகனம் | 0 |
| பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி | 0 | **3111** | பொதுசுகாதார பணிகள் | 1500 |
| தேசிய மீன்வளவளர்ச்சி நிதி | 0 | **3113** | தார்சாலைகள் | 2500 |
| புராதனநல அபிவிருத்தி நிதி | 0 | **3114** | சிமெண்ட் சாலைகள் | |
| தமிழ்நாடு நகர்புறசாலை மேம்பாட்டு நிதி திட்டம் | 2500 | **3132** | | |
| மகாகும்பாஷேக நிதி | 1500 | | | |
| நகராட்சி நிதி | 0 | | | |
| SJSRY | 00 | | | |
| கல்வி நிதி | 0 | | | |
| மொத்தம் | 4000 | | மொத்தம் | 4000 |

2016-2017 மதிப்பீடு

(தொகை ரூ. ஆயிரத்தில்)

| வரவுகள் | | தலைப்பு | செலவுகள் | |
|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | தொகை | | செலதாக்கம் | தொகை |
| சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுநிதி | 9200 | 3102 | கட்டிடங்கள் | 19200 |
| பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி | 6000 | 3102 | கட்டிடங்கள் | 5000 |
| நகராட்சி நிதி | 2500 | 3102 | கட்டிடங்கள் | 27200 |
| இடைநிரப்பு மான்யம் | 4000 | 3102 | கட்டிடங்கள் | 7000 |
| புதைவடிகால் நிதி | 100000 | 3105 | புதைவடிகால் | 8000 |
| வெள்ளநிவாரண நிதி– வடிகால்கள் | 4500 | 3105 | புதைவடிகால் | 100000 |
| கும்பாபிஷேக நிதி | 1500 | 3111 | | 1500 |
| நகராட்சி நிதி–புதைவடிகால் | 500 | 3113 | தார்சாலைகள் | |
| மகாகும்பாபிஷேகம் நிதி | 71340 | 3114 | சிமெண்ட் சாலைகள் | 2500 |

| | | | | |
|---|---|---|---|---|
| சிறப்பு சாலை நிதி | 40000 | *3119* | | |
| குடிநீர் வளர்ச்சி நிதி | 21000 | *3132* | குடிநீர் அமைக்கும் பணி | 10500 |
| பாதாளசாக்கடை திட்ட நிதி | 11700 | *3132* | குடிநீர் அமைக்கும் பணி | 3500 |
| கல்வி நிதி | 5000 | *3132* | குடிநீர் அமைக்கும் பணி | 1500 |
| நகராட்சி நிதி | 34700 | *3132* | குடிநீர் அமைக்கும் பணி | 3000 |
| வடிகால் | 3000 | | தெருவிளக்கு | 7500 |
| சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுநிதி குடிநீர் வளர்ச்சி | 1500 | *3106* | கனரகவாகனம் | 2500 |
| வறட்சி நிவாரண நிதி | 3000 | | | |
| *சிமெண்ட் சாலைகள்* | 2500 | | | |
| மொத்தம் | 321940 | | மொத்தம் | 321940 |

## II குடிநீர் மற்றும் வடிகால் நிதி

***வரவுகள்***

*குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் பெரும்பான்மையான வரவு சொத்து வரியில் குடிநீர் பங்கீடு மூலம் கிடைக்கும் தொகையில் உள்ளது. இதன் விவரம் முறையே :*

***1002 குடிநீர் வரி***

*சொத்துவரியில் குடிநீர் மற்றும் வடிகால் வரிகளை பங்கீடு தொகை இத்தலைப்பில் வரவாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2015-16 ஆண்டு திருத்திய மதிப்பீட்டு ஆண்டில் 11200 ஆயிரமும் 2016..17 மதிப்பீட்டு ஆண்டில் 11400 ஆயிரமும் வரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

***1045 இதர வரவுகள்***

*குடிநீர் மற்றும் வடிகால் நிதிக்கான இதர வரவுகளாக திருத்திய மதிப்பீட்டின் 26 ஆயிரமும் மதிப்பீட்ட ஆண்டில் 30 ஆயிரமும் வரவாக காண்பிக்கப்பட்டுள்ளது.*

***1068 வங்கிகளின் வட்டி வரவு***

*இத்தலைப்பின் கீழ் வங்கிகளிலிருந்து வட்டி வரவாக திருத்திய மதிப்பீட்டில் 200 ஆயிரமம் மதிப்பீட்டு ஆண்டில் 300 ஆயிரமும் வரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

***1069 சொததாக்கும் வரவு***

*குடிநீர் தொடர்பான சொத்தாக்கம் பணிகளுக்கு பணியாளர்களின் மேற்பார்வை கட்டணமாக திருத்திய மதிப்பீட்டில் 320 அயிரமும் மதிப்பீட்டாண்டில் 400 ஆயிரமும் வரவாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது.*

**1081 குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை**

*இந்நகராட்சியில் தற்போது வழங்கப்பட்டுவரும் குடிநீர் இணைப்புகளின் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டு ஆண்டில் 700 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 800 ஆயிரமும் வரவு எதிர்பார்க்கப்படுகிறது.*

**1082 மேற்பார்வை கட்டணம்**

*புதிய இணைப்புகளுக்கான மேற்பார்வை கட்டணம் சென்ற ஆண்டில் 400 ஆயிரமும் வரவாக வரப்பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டில் 300 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 500 ஆயிரமும் வரவாக எதிர்பார்க்கப்படுகிறது.*

**1083 குடிநீர் கட்டணம்**

*கடந்த ஆண்டு இத்தலைப்பில் 5900 ஆயிரம் வரவு வரப்பெற்றுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டில் 6000 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 5900 ஆயிரமும் வரவு எதிர்பார்க்கப்படுகிறது.*

**1084 லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல்**

*திருத்திய மதிப்பீட்டில் 30 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 40 ஆயிரம் வரவாக காண்பிக்கப்பட்டுள்ளது.*

**செலவுகள்**

*குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பெரும்பான்மையான செலவாக மின் கட்டணம் செலுத்துதல் மற்றும் பணியாளர் ஊதியம் போன்றவை அடங்கும்.*

**2001 ஊதியம்**

*இத்தலைப்பில் கடந்த ஆண்டில் 3258 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டில் இதுவரை செலவிடப்பட்டதற்கிணங்க* 3510 *ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில்* 3700 *ஆயிரமும் செலவினம் எஞ்சும் என கணக்கிடப்பட்டுள்ளது.*

**2011 பொங்கல் மிகை ஊதியம்**

*குடிநீர் வழங்கல் பிரிவு பணியாளாக்ளின் பொங்கல் மிகை ஊதியம் திருத்திய மதிப்பீட்டில்* 35 *ஆயிரமும் மதிப்பீட்டில்* 50 *ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

**2012** *பயண செலவுகளுக்கு திருத்திய மதிப்பீட்டிலும் மற்றும் திட்ட மதிப்பீட்டிலும் முறையே* 10 *ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**2016 இலகுரக வாகனங்கள் பராமரிப்பு**

*குடிநீர் பிரிவு இலகுரக வாகனங்கள் பராமரிப்பிற்கு திருத்திய மதிப்பீட்டில் 95 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 100. ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.*

***2029 கடனுக்கான வட்டி செலவினம்***

*புதிய குடிநீர் திட்டங்களுக்கு பெறப்பட்ட கடனுக்கு வட்டி செலுத்தும் பொருட்டு மதப்பீட்டு ஆண்டில் 2000 ஆயிரமும் திருத்திய மதிப்பீட்டால் 2000 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

***2087 மேல்நிலை நீர்தேக்க தொட்டி மின் கட்டணம்***

*மிக முக்கிய அதிகபடியான செலவினமாக இத்தலைப்பிற்கு குடிநீர் நிதியின் கீழ் கடந்த 2014-15ம் ஆண்டில் 2592 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. எனவே இதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டில் 3500 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 3600 ஆயிரமும் செலவிட கணக்கிடப்பட்டுள்ளது.*

***2125 குடிநீர் பராமரிப்பு செலவினம்***

*குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கான 2014-15 ஆண்டில் 2532 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டில் 2015-16ம் ஆண்டில் 3500 ஆயிரமும் மதிப்பீட்டு ஆண்டில் 2014-15ம் ஆண்டில் 3600 ஆயிரம் செலவிட கணக்கிடப்பட்டுள்ளது.*

# <u>III.கல்வி நிதி</u>

***வரவு***

*இதன் பெரும்பான்மையான வரவாக சொத்துவரியில் கல்வி நிதிக்கான பங்கீடு தொகை உள்ளது.*

***1003 கல்வி வரி***

*சொத்துவரியில் கல்வி வரிக்கான பங்கீடு தொகையாக திருத்திய மதிப்பீட்டில் 4600 ஆயிரமும் மதிப்பீட்டில் 4650 ஆயிரம் வரவு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***1068 வட்டி வரவு***

*இத்திட்டத்தில் உள்ள வங்கி கையிருப்பில் கிடைக்கும் வங்கி வட்டியாக திருத்திய மதிப்பீட்டில் 270 ஆயிரம் மதிப்பீட்டாண்டில் 300 ஆயிரம் கணக்கிடப்பட்டுள்ளது.*

***1069 சொத்தாக்கம் மூலம் வரவு***

*கல்வி நிதியின் கீழ் சொத்தாக்கம் செய்யப்பட்ட பணிகளுக்கு மேற்பார்வை கட்டணமாக திருத்திய மதிப்பீட்டிலும் 350 ஆயிரம் மதிப்பிட்டாண்டில் 400ஆயிரம் கணக்கிடப்பட்டுள்ளது .*

**செலவு**

***2126 பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு செலவு***

*பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு செலவாக திருத்திய மதிப்பீட்டில் 100 ஆயிரமும் மதிப்பீட்டில் 150 ஆயிரமும் செலவிட கணக்கிடப்பட்டுள்ளது.*

***கல்வி நிதியின் மூலதன நிதி***

*கல்வி நிதியின் கீழ் மதிப்பீட்டு ஆண்டில் புதிய கடடிடங்கள் கட்ட ......... ஆயிரம் செலவிட கல்வி நிதி ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ளத. மேலும் அதற்கு தக்கவாறு வைப்புத் தொகை வரவு செலவு அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*ஆணையர்*
*சிதம்பரம் நகராட்சி*

**சுருக்கம்**

வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவைகளின் வரவு செலவு சுருக்கம்.

| வ. எண் | நிதி | திருத்திய மதிப்பீடு | | மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | வரவு | செலவு | வரவு | செலவு |
| 1 | வருவாய் நிதி | 162717 | 162411 | 164666 | 163108 |
| 2 | குடிநீர் நிதி | 40450 | 39898 | 43525 | 40665 |
| 3 | கல்வி நிதி | 5635 | 3715 | 5825 | 3832 |
| | மொத்தம் | 208802 | 206024 | 214016 | 207605 |

மூலதன நிதி

| வ. எண் | நிதி | திருத்திய மதிப்பீடு | | மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | வரவு | செலவு | வரவு | செலவு |
| 1 | வருவாய் நிதி | 30802 | 30802 | 222157 | 222157 |
| 2 | குடிநீர் நிதி | 38296 | 35525 | 75822 | 61867 |
| 3 | கல்வி நிதி | 14120 | 10720 | 6000 | 2500 |
| | மொத்தம் | 83218 | 77047 | 303979 | 286524 |